# ஆத்திசூடியும், இஸ்லாமும் வலியுறுத்தும் நீதிக்கருத்துக்கள் : ஒப்பியல் நோக்கினை அடிப்படையாகக் கொண்டது

*முருகையா சதீஸ்1, முஹம்மது பௌவுஸ்தீன் பமீஸ்2*

*1உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.*

*2சமூக அதிகாரி, ஒருங்கிணைந்த நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டம்.*

*[1]satheesmurukaiya@gmail.com, [2]fawsfamees1@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*நீதிக் கருத்துக்களை மானிட சமூகத்திற்கு வலியுறுத்துவதில் இலக்கியங்களும், சமயங்களும் முதன்மை பெறுகின்றன. ஔவையார், 'ஆத்திசூடி' எனும் இலக்கியப் படைப்பின் மூலமாக மானிட வாழ்வுக்குரிய 108 நீதிக் கூற்றுக்களைப் பேசுகிறார். குறிப்பாக அறவுடைமை, கோபம் தவிர்த்தல், கொடையுடைமை, முயற்சியுடைமை, பொறாமை தவிர்ப்பு, பேராசை தவிர்;த்தல், நன்றியுடைமை, தீச்சொல் தவிர்த்தல் முதலிய வாழ்வியல் அறங்களைப் போதிக்கிறார். இதே சிந்தனைகள், இஸ்லாமிய இறைவேதமாகிய குர்ஆனிலும், இறைத்தூதரின் வாழ்வியல் வடிவமாகிய ஹதீஸிலும் நிறையவே பொதிந்துள்ளன. எனவே மானுடவாழ்விற்குரிய நீதிசார் போதனைக்கருத்துக்கள், ஔவையாரின் ஆத்திசூடியிலும், இஸ்லாம் மார்க்கத்தின் புனித நூல்களாகிய குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலிய இலக்கியங்களில் எவ்விதம் பயிலப்பட்டு வந்துள்ளன என்பதனை ஒப்பியல் நோக்கில் வலியுறுத்தி, அவற்றினை எதிர்காலச் சந்ததிக்கு ஆவணப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்புசார் முறை, விபரணப் பகுப்பாய்வு முறை ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி ஒப்பியல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு ஔவையாரின் ஆத்திசூடியும், இஸ்லாமியப் புனிதநூல்களான அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலியவையும் முதன்மைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆய்வுத்தலைப்புடன் தொடர்புடைய நீதிசார் இஸ்லாமியக் கட்டுரை நூல்கள், இதழ்கள், மின்னூடகக் கருத்துக்கள் முதலியவை துணைநிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே வேறுபட்ட மதப்பண்பாட்டு இலக்கியங்களை மையப்படுத்தி, ஒப்பியல் நோக்கில் இதுபோன்ற மேலும் பல ஆய்வுகள் ஆராயப்பட வேண்டுமென்பதையும் இவ்வாய்வானது பரிந்துரை செய்கின்றது.*

***திறவுச் சொற்கள் :*** *ஆத்திசூடி, இஸ்லாம், நீதிக்கருத்துக்கள், ஒப்பியல் நோக்கு*

---

## *1.* ஆய்வு அறிமுகம்

*ஒப்பியல் என்பது வெவ்வேறு மொழிப்பண்பாடுகளுக்கு உட்பட்ட இலக்கியப்படைப்புக்களை அருகருகே வைத்து ஒப்பு நோக்கும் ஆய்வுமுறையாகும். இதன்மூலம் அவ்விலக்கியப் படைப்புக்களின் தனித்துவங்கள் சமூகத்தில் சிறப்புப் பெற வழிவகுக்கின்றன. அவ்வகையில் ஔவையாரின் ஆத்திசூடியும், இஸ்லாமிய மார்க்கத்தின் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலிய புனித நூல்களும் இங்கு ஒப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. ஔவையார் என்ற பெயரில் பலர் வெள;வேறு காலத்தில் வாழ்ந்திருந்தாலும் சோழர் காலத்தில் வாழ்ந்த ஔவையாருக்குத் தமிழிலக்கியப் புலத்தில் தனியான மதிப்புண்டு. ஏனெனில் அவர் சமூகத்தினை நல்வழிப்படுத்தும் முயற்சியில் நீதிப்போதனைகளைப் போதித்து பல அற இலக்கியங்களைப்*

*பாடியுள்ளார். அரசர்களின் ஆதரவைப் பெற்ற இப்பெண்பாற்புலவர், கி.பி 12ஆம் நூற்றாண்டின் சமூகத்தேவையின் பொருட்டு அறத்தினைப் போதிக்கவேண்டிய சூழலில் 'ஆத்திசூடி' எனும் நீதி நூலைப்படைத்து அறப்பணியாற்றினார். இந்நூல் 108 நீதிக்கூற்றுக்கள் மூலம் மானிட வாழ்வுக்குரிய அறம்சார்ந்த கருத்துக்களைப் போதிக்கின்றது. இஸ்லாமிய சமயமானது உலகின் ஆரம்ப கால சமயமாகவும் மேலும் இன்று உலகில் அதிகமானோரால் பின்பற்றப்படும் இரண்டாவது சமயமாகவும் திகழ்கின்றது. இது இறைவனால், முகம்மது நபிக்குச் சொல்லப்பட்ட செய்திகளின் தொகுப்பாகிய 'குர்ஆன்' எனப்படும் வேதத்தினை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. 'இஸ்லாம்' என்ற அராபிய வார்த்தையானது, பணிவு, கட்டுப்படல், வழிப்படல் என்ற அர்த்தத்தோடு, சாந்தி - சமாதானம் என்ற கருத்தைப் போதிக்கிறது. எனவே இஸ்லாமியன் ஒருவன், தன்னைப் படைத்த இறைவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு, இறை தூதர்களுக்கும், அவர்களில் இறுதியாக அனுப்பபட்ட (கி.பி ஏழாம் நூற்றாண்டளவில்) முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வார்த்தைகளுக்கும் கட்டுப்பட்டு ஒழுக வேண்டும்.*

*மேலும் இஸ்லாத்தின் அடிப்படையாக 'வணங்கத்தக்க நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுவதோடு, முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹுவஸல்லம்) அவர்கள், அவனின் அடிமையும், தூதருமாவார் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்' என்ற மேற்கூறப்பட்ட வசனங்களை ஒருவன் உள்ளத்தினால் ஏற்றுக்கொண்டு, நாவினால் மொழிந்தால் முஸ்லிமாக மாறிவிடுவான். அதனைத் தொடர்ந்துள்ள இஸ்லாத்தின் அடிப்படை செயற்பாட்டுத் தூண்களாக தொழுகை (சலாஹ்), நோன்பு (சவ்ம்), ஏழைவரி (சகாத்), புனித மக்கா யாத்திரை (ஹஜ்) என்பனவும் இங்கு முக்கியமானதாகும். இத்தகு கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு மானிட வாழ்வுக்குரிய நீதிக்கருத்துக்கள், இலக்கியமான ஆத்திசூடியிலும், மார்க்கமான இஸ்லாத்திலும் எவ்வாறு புலப்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராய இவ்வாய்வு முயற்சிக்கின்றது.*

### *2. ஆய்வு நோக்கம்*

*மானுடவாழ்விற்கு அவசியமான நீதிசார் போதனைக்கருத்துக்கள் ஔவையாரின் ஆத்திசூடியிலும், இஸ்லாம் மார்க்கத்தின் குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலிய புனித நூல்களிலும் எவ்விதம் பயிலப்பட்டு வந்துள்ளன என்பதனை வலியுறுத்தி, அவற்றினை எதிர்காலச் சந்ததிக்கு ஆவணப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.*

### *3. ஆய்வு முறையியல்*

*இவ்வாய்வானது பண்புசார் முறை, விபரணப் பகுப்பாய்வு முறை ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி ஒப்பியல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஔவையாரின் ஆத்திசூடியும், இஸ்லாமியப் புனிதநூல்களான அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலிய நூல்களும் ஒப்பியல் அணுகுமுறைக்கு உட்படுத்தப்பட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. அதுமட்டுமன்றி நீதிக்கருத்துக்கள்சார் இஸ்லாமியக் கட்டுரை நூல்கள், இதழ்கள், மின்னூடகக் கருத்துக்கள் முதலியவையும் ஆய்வுத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***அறம்***

*இஃது அறமுடைய செயலோம்புவதைக் குறிக்கின்றது. மானிடர்கள், எப்பொழுதும் நல்ல காரியங்களை மட்டுமே செய்வதற்கு ஆசைப்பட வேண்டும். மறந்தும் மனதால்கூட*

*மற்றவர்களுக்குக் கெடுதல் தரும் விடயங்களைப் பற்றி நினைக்கக் கூடாது என்கிறார் ஔவையார். இதனையே 'அறம் செய விரும்பு' (ஆத்திசூடி - 1) என்கிறார். இவ்வாறான அறம் சார்ந்த நீதிக்கருத்துக்கள் இஸ்லாமிய மார்க்கத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளதைக் கூர்ந்து நோக்க முடிகின்றது. இஸ்லாமும், அறம் செய்வதை உயர்வாகவே வலியுறுத்துகிறது. 'இறைவன் உனக்கு நல்லதைச் செய்திருப்பது போன்றே நீயும் நல்லதை செய்' என்பது திருக்குர்ஆன் (28:77) வசனமாகும். இ;;வ்வசனமானது அறம் செய்யுமாறு எல்லோரையும் ஏவுகின்றது. இறையச்சமுள்ள ஒரு முஸ்லிம், நன்மையின் அனைத்துக் கூலியான செயற்பாடுகளினைச் செய்வதற்கு முன்னிப்பார். இதனையே இறைத்தூதர் 'அனைத்து நற்செயல்களும் தர்மமாகும்' (புகாரி) என்று கூறுகிறார். அதுமட்டுமன்றி நல்ல வார்த்தையில்; உரையாடுவதுகூடத் தர்மமாகும் (ஸஹிஹில் புகாரி : 6021, முஸ்லிம் : 1005). 'நன்மையின் பால் ஆதரவு வைப்பவர் யாரோ? அவரே சமூகத்தில் சிறந்தவர்' என இறைத்தூதர்; அவர்கள் குறிப்பிடுவதும் இங்கு அவதானத்திற்குரியது.*

*இஸ்லாத்தின் அறம் பற்றிய மற்றுமொரு முக்கிய கருத்தாக, 'நன்மையான செயல்கள் அனைத்திற்கும் கூலியுள்ளன' என்று நபி அவர்கள் கூறியதாக, ஜாபிர் (ரலி) அறிவிக்கின்றார்கள். 'நன்மையான ஒவ்வொன்றுமே தர்மம் ஆகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (புகாரி : 6021). மேலும் 'ஒவ்வொரு நாளும் சமாதானம் செய்து வைப்பது தர்மமாகும். ஒருவரை அவரது வாகனத்தில் ஏற்றுவதற்கு அல்லது அவரது பொருளை அதன்மீது ஏற்றுவதற்கு நீ உதவி செய்வதும் தர்மமாகும். நல்ல வார்த்தைகளைக் கூறுவது தர்மமாகும். தொழுகைக்குச் செல்வதற்கு எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் தர்மமாகும். பாதையிலிருந்து இடையூறுகளை அகற்றுவது தர்மமாகும்' (முஸ்லிம் 2983, புகாரி : 1009). என்ற உயர் கருத்தும் இஸ்லாத்தின் நோக்குநிலையில் அறத்தினை வலியுறுத்துகின்றன.*

***கோபம் தவிர்த்தல்***

*இஃது வெகுளாமையைக் குறிக்கிறது. இதனையே ஔவையார் 'ஆறுவது சினம்' (ஆத்திசூடி - 2) என்ற கூற்றின் மூலம் வலியுறுத்துகின்றார். கோபத்தைத் தணிக்க வேண்டும். கோபத்தைக் குறைக்க வேண்டும். கோபம் வரும்போது பேச்சைக் குறைத்துக்கொள்ள வேண்டும். கோபத்தில் எடுக்கும் எந்த முடிவும் சரியாக இருக்காது. கோபம் குறைந்த பிறகு ஆற அமர யோசித்து எடுக்கும் முடிவே சரியாக இருக்கும். எனவே கோபத்தைக் குறைத்துக் கொள்வது சாலச் சிறந்தது. கோபம் கொள்ளாமல் இருப்பது அதைவிடச் சிறப்பாக இருக்கும். கோபம் தவிர்த்தல், கோபத்தின் போது நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றிய சிந்தனைகளை இஸ்லாமும் வலியுறுத்தியுள்ளது. இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அடிக்கடி கோபம் ஏற்படக்கூடிய சுவாசம் உடைய மனிதர் ஒருவரைச் சந்தித்தார்கள். அந்த மனிதர், 'நாயகமே, எனக்கு ஏதாவது அறிவுரை கூறுங்கள்' என்று கேட்டுக்கொண்டார். அதற்கு அண்ணல் நபி அவர்கள், 'கோபம் கொள்ளாதீர்கள்' என்று பதில் அளித்தார்கள். அந்த மனிதர் நபிகளாரிடம் மீண்டும், அண்ணலாரே, 'எனக்கு அறிவுரை கூறுங்கள்' என்றார். இவ்வாறு அவர் மீண்டும் மீண்டும் பல முறை கேட்டபோதும், 'நீங்கள் கோபம் கொள்ளாதீர்கள்' என்றே அவருக்கு நபிகளார் பதில் அளித்தார்கள். (புகாரி: 5765). மேலும் 'குத்துச்சண்டையில் அடுத்தவனை வீழ்த்துபவன் வலிமை வாய்ந்தவன் அல்லன் மாறாக கோபம் வரும்போது தன்னைத்தானே அடக்கிக்கொள்பவனே உண்மையான வலிமை வாய்ந்தவன் ஆவான்' என்ற கருத்தின்மூலம், கோபம் வரும்போது இறைவனுக்கும், அவனுடைய தூதருக்கும்*

*விருப்பம் இல்லாத செயலை தவிர்ப்பவன்தான் வலிமை மிக்கவன் என்பது இந்த நபிமொழி மூலம் வலியுறுத்தப்படுகிறது. கோபத்தில் இருந்து நீங்கியிருப்பது கடினமான விடயமாக இருந்தாலும், கோபத்தைத் தவிர்ப்பவர் வலிமை மிக்கவர் என இஸ்லாம் குறிப்பிடுகின்றது. 'நீதிபதி கோபமாக இருக்கும் நிலையில் தீர்ப்பு வழங்க வேண்டாம்' (புகாரி, ஹதீஸ்: 6739) என்ற உயர்கூற்றும் இங்கு போற்றத்தக்கதாகும். ஆத்திசூடி குறிப்பிடுவது போல, கோபத்தில் எடுக்கும் முடிவு ஒருபோதும் சரியாக இருக்காது என்பதுடன், கோபமான நிலையில் தீர்ப்பு வழங்குவதைக் கூட இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்பதே சிறப்பு.*

**கொடை**

*நாம் கொடை கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தவந்த ஔவையார், 'ஈவது விலக்கேல்' (ஆத்திசூடி - 4) என்கிறார். இதன்மூலம் பிறருக்கு உதவி செய்வதைத் தடுக்கக்கூடாது என்கிறார். அதாவது நம்மால் பிறருக்கு உதவிசெய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை, மற்றவர்கள் பிறருக்குச் செய்யும் உதவியைத் தடுக்கக் கூடாது என்பது இதன்மூலம் புலனாகின்றது. இஸ்லாமானது, ஸகாத், ஸதகா, பித்ரா, அகீகா, குற்றப்பரிகாரம், நேர்ச்சை, குர்பான், வக்ப், ஸதகா ஜ்hரிய்யாய்யா வழிகளினூடாகக் கொடையை ஊக்குவிக்கின்றது. 'எந்தப்பொருளை நீங்கள் செலவு செய்த போதும் அதற்குப் பகரமாக அவன் அளிக்கின்றான்' (அல்குர்ஆன்: 34:39) என்ற இறைமறையும், 'அல்லாஹ்வின் திருப்தியை நாடிச் செலவிட்டால் நற்கூலியைப் பெறுவீர்; மனைவியின் வாயில் ஊட்டிவிடும் ஒரு கவள உணவிற்காகவும் நன்மை அளிக்கப்படும்' (புகாரி,முஸ்லிம்) என்ற நபி மொழியும் ஈகையின் சிறப்பினை வெளிக்கொணர்கிறது. சமூகத்திற்கு நிலையான நன்;மையைத்; தரும் கொடைகளான, சமூகத்திற்குப் பொதுவான வேலைகளை முன்னெடுத்தல், பஸ் தரிப்பிடம் அமைத்தல், பொதுக் கிணறு அமைத்தல், கல்வி உதவி தேவையானவர்களுக்கு உதவியளித்தல், பொதுக் கட்டிடங்கள், மண்டபங்கள் அமைத்தல் (பள்ளிவாசல், பாடசாலை) முதலிய கொடைகளை இஸ்லாம் ஊக்குவிக்கின்றது. 'ஒரு மனிதன் மரணத்திற்குப் பின் அவரது செயல்களில் மூன்றைத் தவிர மற்றவை எல்லாம் செயலற்றவை ஆகி விடுகின்றன. அம்மூன்று செயல்களான, சதக்கத்துல் ஜாரியா, பலன் தரும் கல்வி, பெற்றோருக்காகப் பிரார்த்திக்கும் நேர்மையான (ஸாலிஹான) பிள்ளைகள்' (அறிவிப்பவர்: அபூ{ஹரைரா(ரலி), முஸ்லிம்: 1631) இந்நபி மொழி கொடையளித்தலின் அவசியத்தினையும், பயனையும் எடுத்தியம்புகின்றது.*

*மேலும் நாம் பிறருக்குக் கொடைகொடுக்க வேண்டுமே தவிர, யாசகம் பெறக்கூடாது என்கிறார் ஔவையார். இதனையே 'ஏற்பது இகழ்ச்சி' (ஆத்திசூடி - 8) என்கிறார். அத்துடன் பிச்சை எடுத்துச் சாப்பிடுவது இழிவான செயல்தான் என்றாலும் அவ்வாறு பிச்சை கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, பிறகு மீதி இருப்பதை நாம் சாப்பிடுவதுதான் நல்ல செயலாகும் என்றும் சுட்டியுள்ளார். இதனையே, 'ஐயம் இட்டு உண்' (ஆத்திசூடி - 9) என்ற உயர் கூற்று வலியுறுத்துகின்றது. இஸ்லாத்திலும் யாசகம் கேட்பதை விட உழைத்து உண்பதே சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.. 'பிறரிடம் யாசகம் கேட்பதை விட ஒருவர் தம் முதுகில் விறகுக் கட்டைச் சுமந்து (விற்கச்) செல்வது சிறந்ததாகும். அவர் யாசிக்கும்போது யாரும் கொடுக்கவும் செய்யலாம், மறுக்கவும் செய்யலாம்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (புஹாரி*


ISBN: 978-624-5736-55-3

*:2075). ஆதலால் கொடை சிறந்த அறமெனப்படும் என்பதையே ஆத்திசூடியும், இஸ்லாமும் சுட்டிவதை அவதானிக்க முடிகின்றது.*

***முயற்சி***

*இஃது முயற்சியுடைமையைச் சுட்டுகிறது. எந்த ஒரு செயலில் ஈடுபடும்போதும், இடையில் சில தடங்கல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அந்த நேரங்களில், நாம் நம் மனதளவில் உற்சாகத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனக்கூறும் ஔவையார், 'ஊக்கமது கைவிடேல்' (ஆத்திசூடி - 6) என்ற கூற்றின் மூலம் இதனை வலியுறுத்துகின்றார். நாம் தைரியத்தைக் கைவிட்டுவிடக்கூடாது. உடல் அளவில் இருக்கும் தைரியத்தை விட, மனதளவில் கொள்ளும் தைரியம் வேகத்தையும் கொடுக்கும். வெற்றியையும் கொடுக்கும். எனவே நாம் முயற்சியுடையவர்களாகத் திகழவேண்டும். இதனைத் தழுவியதாக இஸ்லாத்தில், 'முயற்சிக்கேற்ப கூலி மற்றும் நன்றி செலுத்தப்படும். நம்பிக்கைக் கொண்ட நிலையில் மறுமையை விரும்பி, அதற்காக முயற்சிப்போரின் முயற்சிக்கு நன்றி செலுத்தப்படும்' (அல்குர்ஆன் 17 : 19) என்ற கூற்றுக் 'இறைவன் முயற்சியையே விரும்புகின்றான்' என்பதனையே காட்டுகின்றது. 'என் அடியான் என்னிடம் ஒரு எட்டு நெருங்கினால், நான் அவனிடம் ஒரு முழம் நெருங்குகிறேன். என்னிடம் ஒரு முழம் நெருங்கினால், அவனிடம் நான் (விரித்த) இரு கைகளின் நீள அளவிற்கு நெருங்குகிறேன். என்னிடம் அவன் நடந்துவந்தால், நான் அவனிடம் விரைந்து ஓடி வருகிறேன்.' அனஸ் (ரலி), (நூல் : புகாரி-7536) என்று அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றமையும் அவதானிக்கத்தக்கது. ஆகவே மேற்குறிப்பிட்ட இறைமறை - இறைத்தூதரியக் கருத்துக்கள் முயற்சியை வலியுறுத்துவதுடன், ஆத்திசூடிக்கருத்துக்களோடு ஒத்தும் போகின்றன.*

**ஒற்றுமை**

*எல்லோரும் உலக அனுபவத்தை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். அதனால் நாம் ஊரோடு ஒத்துப் போகவேண்டியது அவசியம். இதனாலேயே 'ஒப்புரவு ஒழுகு' (ஆத்திசூடி - 10' என்கிறார் ஔவையார். நம்மைச் சுற்றிச்சில நல்ல விடயங்களும், சில கெட்ட விடயங்களும் நடந்து கொண்டேதான் இருக்கும். அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப, நாம் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம் என்கிறார். மேலும் 'கிழமைப் பட வாழ்' (ஆத்திசூடி - 34) என்பதன் மூலமும் இதனையே ஔவையார் வலியுறுத்துகிறார். இதன் மூலம், தனக்கு மட்டுமின்றிப் பிறருக்கும் உதவியாக வாழ வேண்டும் என்கிறார். ஏதோ பிறந்தோம். ஏதோ வாழ்ந்தோம் என்று இல்லாமல், நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் வாழ வைப்பவனே மனிதன் என்கிறார். இஸ்லாத்தில் 'எனது உயிர், எவன் கைவசத்தில் இருக்கிறதோ, அ(ந்த இறை)வன்மீது சத்தியமாக! தமக்கு விருப்பமான ஒன்றை நமது சகோதரனுக்கும், விரும்பும்வரை உங்களில் எவரும் இறைநம்பிக்கை கொண்டவர் ஆகார்'(புகாரி, முஸ்லிம், அறிவிப்பாளர்: அபூஅய்யூப் அல்அன்ஸாரி) என்ற நபிமொழியானது, கிழமைப்பட வாழ்வதினையும், ஒப்புரவுடன் வாழ்வதினையும் குறிப்பிட்டு நிற்கின்றது. ஆகவே ஒருவர் இன்னொருவரோடு விருப்பம், மரியாதை, அன்பு, புரிந்துணர்வு, பரஸ்பரம் பரிமாற்றத்தை கொண்டவராக இருக்க வேண்டும் என்பதை இஸ்லாம் தனிநபர்கள் இடையே வலியுறுத்துகின்றது. ஆகவே இஸ்லாமும், ஆத்திசூடியும் தனிமனிதன் தொடக்கம் சமூகம் வரை ஒற்றுமையையே வலியுறுத்துகின்றது.*

*'தேசத்தோடு ஒத்து வாழ்' (ஆத்திசூடி - 61), 'ஊருடன் கூடிவாழ்' (ஆத்திசூடி - 103) முதலிய ஔவையாரின் கூற்றுக்களும் சிறப்புக்குரியன. இவை மக்களின் ஒற்றுமையையே சுட்டுகின்றன. எனவே ஊரோடு ஒற்றுமையாக இணைந்து வாழ்ந்தால் நமக்கு உயர்வு நிச்சயமாகக் கிடைக்கும் என்பது இதன் மூலம் சுட்டப்படுகின்றது. இஸ்லாத்தில், 'மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான;. ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்;. அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் ஆதரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்' (ஸூரத்துன்னிஸாவு 4:1) என்ற இவ்விறைமறையானது, கூடி வாழ்தல் மற்றும் ஒற்றுமையின் அவசியத்தினை எடுத்தியம்புகின்றது. 'மனிதர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி நன்மையை வளர்ப்பவர்கள் ஒருபோதும் பொய்யர்களாக இருக்க மாட்டார்கள்' (புகாரி முஸ்லிம்). என்ற நபிமொழியானது, மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதனை ஊக்குவிப்பதுடன், இறைத்தூதரானவர் - தனிமனிதர்கள், குழுக்கள், தேசம் சார்ந்த முரண்பாடுகளைத் தீர்ப்பவராகவும், சமாதானத் தூதுவராகவும் இருந்துள்ளார்கள் என்பதனையே சுட்டுகின்றது. 'ஒருவர் மீதொருவர் கற்கள் வீசிக் கொள்ளுமளவிற்குக் வாசிகள் (தமக்கிடையே) சண்டையிட்டுக் கொண்டனர். அல்லாஹ்வின் தூதரிடம் இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது. அவர்களிடம் நம்மை அழைத்துச் செல்லுங்கள்! அவர்களுக்கிடையே சமாதானம் செய்து வைப்போம் என்று கூறினார்கள்' (அறிவிப்பவர்: சஹ்ல் பின் சஅத்(ரலி), புகாரி: 2693) என்ற கருத்து, சமூக ஒற்றுமையின் தேடலையே பறைசாற்றுகின்றது.*

***கல்வியுடைமை***

*இஃது கற்றற்பேறுடைமையைக் குறிக்கிறது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் படியுங்கள். படிப்பதை மட்டும் விட்டுவிடவே கூடாது. செல்வத்திற்கு, அது இருக்கும் இடத்தில்தான் சிறப்பு. ஆனால் நாம் கற்றிருக்கும் கல்வியானது நாம் செல்லும் இடங்களில் எல்லாம் சிறப்பைக் கொடுக்கும் என்கிறார் ஔவையார். இதனை ஔவையாரின் 'ஓதுவது ஒழியேல்' (ஆத்திசூடி - 11) எனும் கூற்று எடுத்தியம்புகின்றது. இதைப்போலவே கல்வி கற்றவர்களின் மகத்துவத்தை இஸ்லாமிய இறைமறை பல்வேறு இடங்களிலும் சிறப்பிக்கின்றது. அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? என(நபியே!) நீர் கேட்பீராக, சிந்தனையுடையோர் தாம் நல்லுபதேசம் பெறுவார்கள்.' (39 : 9) என்ற கூற்றின்மூலம் கற்றறிந்தவர்களின் உபதேசங்களைக் கேட்டு ஒழுகவேண்டியதன் அவசியத்தை உணலாம். அத்துடன் நாம் கற்றதை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பது நல்லது. இஸ்லாத்தில் கல்வியுடைமையைப் பொறுத்தவரையில், கல்வியுடைமை இல்லாதவர்களை விடக் கல்வியுடையவர்கள் சிறப்பானவர்களாகக் கருதப்படுகின்றனர். 'நபியே! கல்வி கொடுக்கப்பட்டவர்கள், அத்தகையோர் உம்முடைய ரப்பிடமிருந்து அருளப்பட்ட இவ்வேதத்தை உண்மை என்பர்' (ஸூறா சுபஹ் : 6) என்ற கருத்து இஸ்லாத்தில் முக்கியம் பெறுகின்றது. 'உங்களில் இறை நம்பிக்கையாளர்களுக்கும் கல்வி கொடுக்கப்பட்டவர்களுக்கும் பல படித்தரங்களை அல்லாஹ் உயர்த்துவான்' (58:11) என்ற இறைமறைக் கூற்றும் முக்கியமானது. மேலும் 'அஞ்சக் கூடியவர்கள் அறிஞர்களே' (38:28) எனத்*

*தொடர்ந்து கல்வி கற்றவர்களையும் அவர்களுக்கான சிறப்பையும் பற்றிக் குறிப்பிடுகின்றது இறைமறை.*

*ஔவையாரின் நீதிக் கருத்தினைப் போன்றே, கற்றவர்களுக்குத் தனிச் சிறப்பினை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. 'ஓதுவது ஒழியேல்' என்ற ஔவையாரின் கருத்தினைத் தழுவியதாக, இஸ்லாத்தின் இறைமறை வசனம் 'ஓதுவீராக, வாசிப்பீராக, சிந்திப்பீராக' என்ற ஏவலாகவே இருக்கின்றது. இறைமறையை ஓதுதலினை (வாசித்து, விளங்குதல்) இறைத்தூதர் நன்மையாகவும், மறுமைக்கான அறுவடையாகவும் குறிப்பிட்டுள்ளார். இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள், 'நீங்கள் அல்குர்ஆனை அதிகமாக ஓதுங்கள். அதை ஓதியவருக்கு அது மறுமையில் சிபாரிசு செய்யும் (புகாரி) என்கிறார். 'இளமையில் கல்' (ஆத்திசூடி - 29) என்பதன் மூலமும் இளமைக்கல்வியின் அவசியத்தைக் கூறுகின்றார் ஔவையார். குழந்தைப் பருவத்திலிருந்தே நாம் கற்கும் ஒவ்வொரு விடயங்களும் பசுமரத்தாணி போல் மனதில் ஆழமாகப் பதியும். அதுவே பிற்காலத்தில் நல்லவர்களாகவும், கெட்டவர்களாகவும் ஆக்கும். ஆகவே சிறு வயதிலிருந்தே கல்வியைக் கற்பது மிகச் சிறப்பாகும் என்கிறார் ஔவையார். இளமையை மிகவும் பயனுடையதாகவும், பிரயோசனம் உடையதாகவும் பயன்படுத்துமாறு இஸ்லாம் குறிப்பிடுகிறது. நபி (ஸல்) அவர்கள்;, 'ஐந்து விடயங்களுக்கு முக்கியம் அளிக்கிறார்.*

*1. வயோதிபம் வரும் முன், உனது வாலிபத்தைப் பயன்படுத்திக்கொள்!*

*2. நீ நோய் வசப்படமுன், உனது ஆரோக்கியத்தைப் பயன்படுத்திக்கொள்!*

*3. வறுமை வரும் முன், உனது செல்வத்தைப் பயன்படுத்திக்கொள்!*

*4. நேரமின்மை ஏற்படும் முன், உனது ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக்கொள்!*

*5. உனக்கு மரணம் வருமுன், உனது வாழ்நாளைப் பயன்படுத்திக்கொள்! (அஹ்மத்)*

*இந்த அடிப்படையிலேயே, மிக முக்கியமாக வாலிபத்திற்குரிய இளமையை, மிகப் பிரயோசனமாகக் கழிக்குமாறும், கல்வியின் மூலமாக அதனைப் பிரயோசனமாகப் பயன்படுத்துவதுடன், அதற்காகப் பயணிப்பது இறை வழியிலேயே சுவனத்தை நோக்கிய பாதையில் பயணிப்பது போன்றதாகும் என்று இஸ்லாமிய சமயம் நம்புகின்றது.*

*ஆத்திசூடி தொடர்ந்து குறிப்பிடும் கருத்தாக, தான் கற்றதைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்குமாறு குறிப்பிடுகிறது. இதைப்போலவே நாம் கற்றதைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்குமாறு இஸ்லாமும் வலியுறுத்துகிறது. 'குர்ஆனை, தானும் கற்று அதைப் பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர் ஆவார்' (புகாரி: 5027). அத்துடன் 'நூல் பல கல்' (ஆத்திசூடி - 70) என்கிறார் ஔவையார். நிறையப் படிக்க வேண்டும். நிறையத் தெரிந்து கொள்ள வேண்டும். அறிவு வளர்ச்சிக்கான வெள;வேறு வகையான நூல்களை, அதிகமாகப் படிக்க வேண்டும் என்கிறார் ஔவையார். ஆத்திசூடி குறிப்பிடுவது போன்று இஸ்லாம் கற்பதனை ஊக்குவிக்கின்றது. அதுமட்டுமன்றி இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற மிக முக்கியமான போராகவும், முதல் போராகவும் விளங்கிய பத்ர் (பதுரு) யுத்தத்தின் போது கைதிகளாகப் பிடிபட்ட எதிரிகளில், கற்றவர்களைக் கொண்டு மதீனத்துச் சிறார்களுக்குக் கற்பிக்குமாறு பணித்ததுடன் பின்னரே அவர்கள் விடுதலையாக்கப்பட்டார்கள். வெற்றிகரமான சமூகத்துக்குக் கற்றல் அவசியமான பண்பாகும் என்ற வகையில், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹுவஸல்லம் தனது*


ISBN: 978-624-5736-55-3

*சமூகத்திற்கு என்னென்ன கல்வித் தேவைகள் இருந்ததோ, அதனைத் தேடிக் கற்குமாறு கூறினார்கள். இதற்குச் சான்றாகப் பிற மொழியைக் கற்க வேண்டிய தேவை ஏற்பட்ட போது, அதனைக் கண்ட நபி (ஸல்) ஸஹாபாக்களினை ஊக்குவித்தார்கள்.*

***பொறாமை தவிர்ப்பு***

*நாம் மற்றவர்களைப் பற்றி பேசும்போது பொறாமையோடு பேசக் கூடாது. போட்டி இருக்கலாம். ஆனால் பொறாமை இருக்கக்கூடாது. போட்டி இருந்தால் அங்கே ஆரோக்கியமான வளர்ச்சி இருக்கும். பொறாமை இருந்தால் அங்கே நிச்சயமாக அழிவுதான் இருக்கும். இதனாலேயே ஔவையார் 'ஔவியம் பேசேல்' (ஆத்திசூடி - 12) என்கிறார். பொறாமை நம்மை அழித்து விடும். எனவே அடுத்தவர்களைப் பற்றிப் பேசும்போது, பொறாமையைத் தவிர்த்துப் பெருமையோடு பேசுவதே எமக்கு நன்மையைத் தரும். இதனைத் தழுவியதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுடத்து, 'நிச்சயமாக பொறாமைப்படுவது நெருப்பு, விறகைக் கரித்து விடுவது போலக் கரித்து விடும்' (மிஸ்காத்) என்கிறார்.*

*மேலும் 'வஞ்சகம் பேசேல்' (ஆத்திசூடி - 27) என்பதும் பொறாமைப்பட்டுப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதனையே வலியுறுத்துகின்றது. 'இன்னும் பொறாமைக்காரன் பொறாமைப் படும்போது ஏற்படும் தீங்கை விட்டும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன் என நபியே! நீர் கூறுவீராக!' (113 : 5) என்ற குர்ஆனியக் கூற்றானது, பொறாமைத் தவிர்ப்பினையும், பொறாமைப்படுபவர்களிடம் இருந்து இறைப்பாதுகாப்புத் தேடுவதினையும் குறிப்பிடுகின்றது. ஆத்திசூடியில் ஔவையார் குறிப்பிட்டது போல இஸ்லாத்திலும் மார்க்கத்தினை அழிக்கவல்லது பொறாமையென்றே கூறப்படுகின்றது. இது பற்றி இறைத்தூதர் குறிப்பிடுமிடத்து 'முன்னைய சமூகத்திற்கு வந்த புற்றுநோய் உங்களுக்கும் வந்துள்ளது. இவை பொறாமையும் கோபமும் ஆகும். இது சிரைத்து விடுவதாகும். நான் தலைமுடியைச் சிரைத்து விடுவதினைக் குறிப்பிடவில்லை. மாறாக அது மார்க்கத்தினையே சிரைத்துவிடும்' (திர்மிதி : 2510) என்ற கூற்றும் இதன் தீமையைக் குறிப்பிடுகின்றது.*

***பேராசை தவிர்த்தல்***

*அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படக் கூடாது. அதிலும் மற்றவருடைய நிலத்தை அபகரித்து வாழக்கூடாது. மண், பெண், பொன் இம்மூன்றிலும் ஆசை வைக்கக் கூடாது என்று கூறும் ஔவையார் 'மண் பறித்து உண்ணேல்' (ஆத்திசூடி - 23) என்ற கூற்றின் மூலம் இதனை வலியுறுத்துகின்றார். பேராசைப்படுபவன் துர்பாக்கியவான் என இறைத்தூதர் குறிப்பிட்டுள்ளார்கள் 'பொற்காசு, வெள்ளிக்காசு, குஞ்சம் உள்ள (ஆடம்பர) ஆடை, சதுரக் கம்பளி ஆடை ஆகியவற்றுக்கு அடிமையாகிவிட்டவன், துர்பாக்கியவான் ஆவான். அவனுக்கு (செல்வம்) வழங்கப்பட்டால் திருப்தியடைவான். (செல்வம்) வழங்கப்படாவிட்டால் அதிருப்தியடைவான்' என அபூஹுரைரா(ரலி) அறிவித்தார் (புகாரி: 6435). போதுமென்ற மனமே ஒரு முஸ்லிமுக்குரிய பண்பாகும். 'வசதி வாய்ப்புகள் அதிகமாக இருப்பது செல்வம் கிடையாது. போதுமென்ற மனம் தான் செல்வமாகும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி), புகாரி: 6446). எனவே பொறாமையும் அதனோடு இணைந்த பேராசையும் தவிர்க்க வேண்டியது அவசியமாகும்.*

*ஔவையாரும், 'கொள்ளை விரும்பேல்' (ஆத்திசூடி - 41) என்பதன் மூலமும் இதனை வலியுறுதியுள்ளார். மற்றவர்களின் பொருளுக்கு ஆசைப்படாதே. இருப்பதைக் கொண்டு இனிய வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். ஆனால் இஸ்லாத்தில் இரண்டு விடயங்களுக்காக போராசை, பொறாமைப்பட முடியும் என்று கூறப்பட்டுள்ளது. அவை 'ஒருவருக்கு அல்லாஹ் வழங்கிய செல்வத்தை அவர் நல்ல வழியில் செலவு செய்தல்;. இன்னொருவருக்கு அல்லாஹ் அறிவு ஞானத்தை வழங்கி, அதற்கேற்ப அவர் தீர்ப்பு வழங்குபவராகவும் கற்றுக் கொடுப்பவராகவும் இருத்தல்' ஆகிய விஷயங்களைத் தவிர வேறு எதிலும் பேராசை கொள்ளக் கூடாது' என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவித்தார்கள்(புகாரி) என்பதும் இங்கு அவதானிக்கத்தக்கது.*

***பொய் தவிர்த்தல்***

*நாம் கண்களால் பார்த்ததைத் தவிர வேறு எதையும் சொல்லக் கூடாது என்கிறார் ஔவையார். எந்த ஒரு விடயமும் பொய்யாக விபரித்து, ஒன்றைப் பத்தாக்கிக் கூறக்கூடாது. அதனால் பல பிரச்சினைகள் உருவாகலாம். ஆகவேதான் ஔவையார் 'கண்டு ஒன்று சொல்லேல்' (ஆத்திசூடி - 14) என்கிறார். எனவே நாம் எதையாவது சொல்ல நினைத்தால் அதை மிகைப்படுத்தாமல் சொல்லப் பழகிக்கொள்ள வேண்டும். மேலும், பொய்யை உண்மையைப் போலப் பேசக் கூடாது. ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பப் பேசினால் அது உண்மையாகி விடும் என்பார்கள். ஒரு பொய்யை மறைக்க ஆயிரம் பொய் சொல்ல நேரிடும். எனவே பொய் சொல்லக்கூடாது. இதனையே 'சித்திரம் பேசேல்' (ஆத்திசூடி - 45) என்கிறார் ஔவையார். இஸ்லாத்தில் அவ்வையாரின் இந்நீதிக் கருத்தினை ஒத்ததாக, ஒரு விடயத்தைப் பற்றித் தெரியாமல், அது பற்றிய அறிவு இல்லாமல் பேச வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது. இதனை அல்குர்ஆன், 'உனக்குச் சரியான விளக்கமான அறிவு இல்லை எனில் அதனை நீர் பின் தொடராதே' (அல்குர்ஆன், 17: 50) என்கிறது. இவ்வசனம் குறிப்பிடும் விடயமாக ஒரு விடயம் பற்றி அறிவு இல்லாத நிலையில் அதனைப் பற்றிப் பின்தொடர அல்லது அதைப்பற்றிப் பேச வேண்டாம் என்கின்றது. இஸ்லாத்திலும் ஒன்றைப் பற்றிப் பத்தாக்கிக் கூறுதல் பல பிரச்சினைகளையும் குழப்பங்களை ஏற்படுத்தும் என்ற கருத்தும் சொல்லப்படுகின்றது. 'உண்மை என்பது மன அமைதியையும், பொய் என்பது மனக்குழப்பங்களையும் ஏற்படுத்துவதாகும். இதனை இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டேன்' என அலி இப்னு அபூதாலிப் (ரழி) அறிவிற்க்கின்றார்கள் (அத்திர்மிதி).*

*'ஒரு முஸ்லிம் உலோபியாக இருக்க முடியுமா? கோழையாக இருக்க முடியுமா?' என்று ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. நபி (ஸல்) அவர்கள், 'இருக்கமுடியும்' என்று ஏற்றுக் கொண்டார்கள். 'ஒரு முஸ்லிம் பொய்யனாக இருக்க முடியுமா?' என்று கேட்கப்பட்ட போது, 'ஒரு முஃமின் பொய்யனாக இருக்க முடியாது' நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் (முஅத்தா மாலிக்). ஆகவே பொய்த் தவிர்த்தலினை இஸ்லாம் வலியுறுத்துவதுடன், பொய்பேசுதல் என்பது பாவத்தின்பால் இட்டுச் செல்லும். இதனை இறைத்தூதர் நபி (ஸல்) '....பொய்யைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். பொய் பாவத்துக்கு வழிகாட்டும். பாவமோ நரகத்துக்கு இட்டுச் செல்லும் இறைவனிடத்தில் ஒரு 'பொய்யன்' என எழுதப்படும் வரை ஒரு மனிதர் பொய்யனாக நடப்பதுடன் பொய்யை முயற்சியுடன் தேடுவார்' என்று கூறுகின்றார் (முஸ்லிம்: 6805). ஆகவே ஆத்திசூடியின் நீதிக்கருத்தான பொய் தவிர்த்தல் என்பதுடன், இஸ்லாம் ஒத்துப்போகின்றது.*

*மேலும் பொய் பேசுதலுடன் தொடர்புடைய ஏனைய பண்புகளான, ஒப்பந்தம் செய்தால் அதனை மீறுதல், வழக்காடினால் பாவம் செய்தல், நம்பினால் மோசம் செய்தல் முதலியவற்றையும் நயவஞ்சகருக்குரிய பண்பாகவே இஸ்லாம் நோக்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.*

**பெற்றோரைக் காத்தல்**

*நம்மைப் பெற்ற தாய், தந்தையரைப் பேணிக்காக்க வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களில் முதல் இரண்டு இடத்தைப் பிடித்துள்ள நம் பெற்றோரை, நாம் பேணிக்காக்க வேண்டியது அவசியம். இதனையே 'தந்தை தாய் பேண்' (ஆத்திசூடி - 20) என்ற ஔவையாரின் கூற்று உறுதிசெய்கிறது. இதன் மூலம் நம்மை இந்த உலகுக்கு அறிமுகப்படுத்திய நம் பெற்றோரைக் கடைசிக் காலம் வரை நன்றாக ஆதரித்து, கவனித்துக்கொள்ள வேண்டும் என்கிறார் ஔவையார். இதனைத் தழுவியதாகவே தாய் - தந்தையருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறும், இவ்வாறு நடந்து கொள்வது ஈருலகிலும் சிறந்த பாக்கியமாக இருக்கும் என இஸ்லாம் குறிப்பிடுகிறது. ஆத்திசூடி பெற்றோருக்குக் கடமையை செய்தல் கடவுளுக்குரிய கடமையைச் செய்வதற்கு உப்பாகக் குறிப்பிடுகின்றது. மேலும் பெற்றோருக்கு நன்றி செலுத்துவது இறைவனுக்கு நன்றி செலுத்துவது போன்று இஸ்லாம் வலியுறுத்துகின்றதுடன் அவர்களுக்கு நாவினால் கூட 'சீ' எனக் குறிப்பிட வேண்டாம் எனக் கூறி பெற்றோரைக் காக்கப் பிரயத்தனம் செய்கிறது.*

*'அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால், அவர்களைச் 'சீ' என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம். அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம். இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக!' (அல்குர்ஆன், 17:123) என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. இவ்வசனமானது பெற்றோரைப் பேச்சில் கூட 'சீ' என்று கூட கூறவேண்டாம் என்பதுடன், கண்ணியமாகப் பேசுமாறும் குறிப்பிடுகின்றது. பெற்றோரைப் பேணுதலானது சுவனத்திற்குரிய செயற்பாடான, இறைவழிப் போராட்டத்தினை விடச்சிறந்தது என்று இஸ்லலாத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒருவன், நபியிடம், 'இறைத்தூதர் அவர்களே, அல்லாஹ்விடம் நற்கூலியைத் தேடியவனாக, ஹிஜ்ரத் செய்யவும் ஜிஹாத் செய்யவும் தங்களிடம் உறுதிப் பிரமாணம் செய்கிறேன்' என்று கூறுகிறான். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், 'உம் பெற்றோரில் யாரும் உயிருடன் உள்ளனரா?' என்று வினவினார்கள். அதற்கு அவர், 'ஆம்! இருவரும் உள்ளனர்' என்றார். அதற்கு நபி, 'நீ அல்லாஹ்விடம் நற்கூலியைத் தேடுகின்றீரா?' என்று வினவினார்கள். அதற்கவர் 'ஆம்' என்று கூறினார். 'அப்படியானால் உம் பெற்றோரிடம் திரும்பிச் சென்று அவ்விருவரிடமும் அழகிய தோழமையைக் கடைப்பிடிப்பீராக' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள். (அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னு ஆஸ் ரலி), (புகாரி, முஸ்லிம்). இக்கூற்று பெற்றோரைப் பேணவேண்டியதன் அவசியத்தையே சுட்டுகின்றது.*

**நன்றியுடைமை**

*ஒருவர் நமக்குச் செய்த உதவியை நாம் என்றும் மறக்கக் கூடாது. இதனையே ஔவையார் 'நன்றி மறவேல்' (ஆத்திசூடி - 21) என்கிறார். நாம் மற்றவர்களுக்குச் செய்த உதவியை அன்றே*

*அப்பொழுதே மறந்து விட வேண்டும். ஆனால் மற்றவர்கள் எமக்குச் செய்த உதவியை எந்தக் காலத்திலும் மறந்து விடாமல் நன்றி பாரட்ட வேண்டும் என்கிறார். இஸ்லாத்தில் நன்றியுணர்வு முக்கிய செயற்பாடாகப் பார்க்கப்படுகிறது. 'என்னை நினையுங்கள்! நானும் உங்களை நினைக்கிறேன். எனக்கு நன்றி செலுத்துங்கள்! எனக்கு நன்றி மறக்காதீர்கள்! (அல்பகரா : 152) என்று அல்லாஹ் நன்றிசெலுத்துமாறு கூறுவது இங்கு அவதானிக்கத்தக்கது. இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மற்றும் ஏனைய நபிமார்கள் நன்றி உணர்வாக இருந்ததை இஸ்லாம் நிறைய இடங்களில் குறிப்பிடுகின்றது. இஸ்லாத்தில், 'யார் மனிதர்களுக்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் இறைவனுக்கு நன்றி செலுத்தாதவர் ஆவார். ஒரு மனிதனுக்குப் பிறமனிதர்கள் மீதுள்ள கடமைகளில் முக்கியமானது. தமக்கு நன்மை செய்தவருக்கு நன்றி தெரிவிப்பதாகும்' என்ற நபி மொழியும் அத்துடன் 'முன் பின் பாவம் மன்னிக்கப்பட்ட நபி (ஸல்) அவர்கள், தன் கால் பாதம் வீங்கும் அளவிற்கு இறைவனை நின்று வணங்கினார்கள். இதுபற்றி அவரிடம் வினாவிய போது, 'நான் நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டாமா?' என்று பதில் அளித்தார்' (புகாரி) இக்கூற்றானது செய்ந்நன்றியறிதலின் மகத்துவத்தினைப் புலப்படுத்துகின்றது.*

***தீச்சொல் தவிர்த்தல்***

*மற்றவர் முகம் கோணும்படியான சொற்களை நாம் பேசக்கூடாது. காதால் கேட்பதற்கே கூசும்படியான அருவருப்பான, கேவலமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். கையால் ஒரு அடி அடித்துவிட்டாலும் அன்பால் அதை மறந்துவிடச் செய்யலாம். ஆனால் வாயால் பேசும் ஒரு தீய வார்த்தையானது என்றும் மனதைவிட்டு அகலாது. இதனாலேயே 'சுளிக்கச் சொல்லேல்' (ஆத்திசூடி - 47) என்று வலியுறுத்துகின்றார் ஔவையார். மேலும் 'துன்பத்திற்கு இடம் கொடேல்' (ஆத்திசூடி - 58) என்கிறார். அதன்மூலம் பிறர் மனம் வருந்தும்படியாகவோ, மனம் புண்படும்படியாகவோ நடந்து கொள்ளக் கூடாது. பேசவும் கூடாது என்பதனைச் சுட்டுகின்றார். அத்துடன் 'நொய்ய உரையேல்' (ஆத்திசூடி - 74), 'பிழைபடச் சொல்லேல்' (ஆத்திசூடி - 78), 'வெட்டெனப் பேசேல்' (ஆத்திசூடி - 104) என்ற கூற்றுக்களும் முக்கியமானவை. எனவே பிறர் மனம் நோகும்படியாகப் பேசக் கூடாது. எப்போதும் அன்பான வார்த்தைகளைப் பேச வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.*

*இஸ்லாமிய மார்க்கத்தில் மேற்குறிப்பிட்ட கருத்துக்களைத் தழுவியதாக '..அல்லாஹ்வையும் மறுமை நாளையும் யார் நம்புகிறாரோ, அவர் நல்லதைப் பேசட்டும். அல்லது வாய் மூடி இருக்கட்டும்.' (புகாரி (6018) என்ற கூற்றுக் காணப்படுகின்றது. 'ஸலாத்தைப் பரப்பு. நல்ல பேச்சைப் பேசு. உறவுகளை இணைத்து வாழ். மக்கள் உறங்கும் போது இரவில் நின்று வணங்கு. சாந்தியுடன் சொர்க்கத்தில் நுழைவாய்' (அஹ்மத்: 9996) என்ற நபிமொழி, பேசினால் நல்லதையே பேசுமாறு குறிப்பிடுகின்றது.*

***4. முடிவுரை***

*மானிட சமூகத்தினை நீதியின்பால் வழிகாட்டுபவையாக இலக்கியங்களும், சமயங்களும் திகழ்கின்றன. இதனாலேயேதான் இவை உயரிய இலட்சியங்களைக் கொண்டுள்ளன. குறிப்பாகத் தத்தம் சமூகத்தினை அறத்தின்பால் செயற்படவைக்கவே காலத்தேவையின் பொருட்டு நீதிக்கருத்துக்களை ஆத்திசூடியும், இஸ்லாமும் வலியுறுத்தியுள்ளன. ஔவையார் சோழர்காலத்தில் தாம்சார்ந்த இந்துமத உண்மைகளை அறத்தின்வழி நிலைப்படுத்தியதைப்*

போன்று, இஸ்லாமும் நீதிசார் போதனைகளின்மூலம் தன்மார்க்கத்தை அறத்தின்வழி கட்டமைக்க முனைந்துள்ளது. இதனால் ஒழுக்கவியல்சார்ந்த உலகையே ஆத்திசூடியும், இஸ்லாமிய இலக்கியங்களும் காண அவாக்கொண்டுள்ளது. எனவே மதங்களுக்கும், இலக்கியங்களுக்கும் இடையிலான உறவினைக் கட்டியெழுப்பி சமாதானமிகு வாழ்வை ஏற்படுத்தும் பொருட்டு ஒப்பியல் அணுகுமுறையில் இவ்வாய்வு ஆராயப்பட்டுள்ளது. ஆகையால் இது சார்ந்த வெள;வேறு மொழிப்பண்பாடுகளுக்குட்பட்ட மேலும் பல ஒப்பியல்சார் ஆய்வுகள் ஆராயப்பட வேண்டும் என்ற கருத்தையும் இவ்வாய்வு முன்வைக்கின்றது.

## 5. References


Aljijlasthani & Aboothauth. (1999). *Sunan Abu Dawud*, Makthaba Thijariyyah.

*Al Quran*. (2002). Ministry of Islamic affairs. king Fahad publication.

Balasundaram Pillai, T.S., (1943). *Awwaiyar Thiruvullam*. Tirunelveli South Indian Vegan Centenary Society.

Bin Yaeeh Alkasweenee, M., (1956). *Sunan Ibnu Maajah*. Tharul Ihaaul kutub.

Bin Yaeeh Alkasweenee, M., (1956). *Sunan Ibnu Maajah*. Tharul Ihaaul kutub.

Ismail Albuhaari, M., (1997). *Sahih al Bukhari*. Tharul Arham.

Islah Aththirmithi, M., (1970). *Sunan Attirmiti*. lajnatul tahleef.

Bin Isaah, M., & Aththirmithi., (1970). *Sunan Attirmiti*. lajnatul Tahleef.

Muslim bin ismail, & Annaisaaboori. (1997). *Sahih Muslim*. Tharul Ibnu kasm.

Rumuganavalar. (1955). *Aathichudi*. Vidhyanupalana Machinery.

Sokkalingam, S.N., (1994). *Awwaiyar Songs*. Vanathi Publishing.

Subramaniabhari, A., (1921). *Awwai Arunthamizh*. Palaniyandipillai Company.